# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 213மா/2022**
**நாள்: 04.09.2023**

திரு. மு. அரவிந்த் ராஜ்,
திருச்சிராப்பள்ளி – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
வார்டுகுழு அலுவலகம் (IV)
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி – எதிர்மனுதாரர்

திருச்சி, எடமலைப்பட்டி புதூர், ராஜீவ் காந்தி நகர், கதவு எண் 8/6 Aல் வசிக்கும் திரு. மு. அரவிந்த் ராஜ் என்பவரின் 20.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2022–ல் பெறப்பட்டு 213/மா/2022 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

2. திருச்சிராப்பள்ளி, எடமலைப்பட்டி புதூர், ராஜீவ்காந்தி நகர், கதவு எண் 8/6 Aல் வசிக்கும் திரு. மு. அரவிந்த் ராஜ் என்பவரின் 20.10.2022 நாளிட்ட தனது மனுவில்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி கோ.அபிஷேகபுரம் கோட்டம், எடமலைப்பட்டி புதூர், ராஜீவ்காந்தி நகரில் பிரதான சாலையை வெள்ளைய நாயக்கர் மகன் சுந்தரம் என்பவர் பொது சாலையை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருகிறார். இது தொடர்பாக கடந்த ஒரு ஆண்டாக பலமுறை மாநகராட்சி அதிகாரிகளுக்கு மனு செய்தும் வெறும் குறிப்பாணை மட்டும் அனுப்பி விட்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளனர். இது தொடர்பாக விசாரித்த போது நான்

கொடுத்த புகார் மனுவின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருக்க கிராப்பட்டியில் உள்ள இளநிலை பொறியாளர் சுந்தரம் அவர்களிடமிருந்த புரோக்கர் மூலம் பெரும் தொகையை லஞ்சமாக பெற்றுக் கொண்டு உள்ளார் என தெரிய வந்தது. பொதுப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற இளநிலை பொறியாளர் அவர்களுக்கே அதிகாரம் உள்ள நிலையில் அவரோ எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தன் அலுவலகத்திற்கு வரும் புகார் கடிதத்தை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு மெத்தனபோக்காக செயல்பட்டு வருகிறார். எனவே, நான் கொடுத்த பல மனுக்களின் மீது எந்தவித நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் எடமலைப்பட்டிபுதூர் பகுதிக்கான இளநிலைப் பொறியாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்தும் மற்றும் பிரதான சாலையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**3. இம்முறைமன்ற கடித நாள் 09.11.2022 வாயிலாக திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையாளர் தன்னுடைய 17.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

திரு. மு. அரவிந்த் ராஜ் என்பவர் வார்டு எண்.57 புல எண்.130/17-A பகுதி எடமலைப்பட்டிபுதூர், ராஜிவ்காந்தி நகர் பகுதியில் கதவு எண்.6ன் முன்புறம் உள்ள பொதுப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றக் கோரி விண்ணப்பம் செய்ததற்கு மனுதாரர் குறிப்பிடும் கட்டிடத்திற்கு அனுமதி பெற்றதற்கு மாறாக கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மாநகராட்சி சட்டம் 1994 விதி 282 (1) (2)ன் கீழ் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் கட்டிட உரிமையாளர் வெ.சுந்தரம் மீது திருச்சிராப்பள்ளி மாவட்ட 2ம் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு எண்.STC No.6787/2022 ல் வழக்கு தொடரப்பட்டதில் நீதிமன்றத்தில் கட்டிட உரிமையாளருக்கு ரூ.1000/- அபராதம் விதிக்கப்பட்டு அதனை 10.11.2022ல் நீதிமன்றத்தில் செலுத்தியுள்ளார்.

இந்நிலையில், மனுதாரர் மீண்டும் அதே கோரிக்கையினை வலியுறுத்தி மனு அளித்ததன் பேரில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, நகரசார் ஆய்வரை கொண்டு இடம் அளவீடு செய்யப்பட்டது. அளவீடு பணி செய்ததில் திரு.வெ.சுந்தரம் என்பவர் மேற்படி பொதுப்பாதையில் சுற்றுச்சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளது நகரசார் ஆய்வரால் கண்டறியப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. ஆக்கிரமிப்பு என குறிப்பிடப்பட்ட பகுதியில் நிரந்தர கட்டடங்கள் கட்டப்படவில்லை. விரைவில் காவல்துறையின் உதவியுடன் ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதி அகற்றப்படும் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் 31.08.2023 அன்று ஆக்கிரமிப்புகள் அகற்ற காவல்துறை ஆணையர் அவர்களுக்கு பாதுகாப்புக் கோரி இவ்வலுவலக கடிதம் அனுப்பியுள்ள நிலையில் மனுதாரர் கோரும் பொதுப்பாதை ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என்று தெரிவித்துள்ளார்.

**4. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி எழுத்துமூலமாக தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:

திருச்சி, எடமலைப்பட்டிபுதூர், ராஜிவ்காந்தி நகர், கதவு எண் 8/6 Aல் வசிக்கும் திரு. மு. அரவிந்த் ராஜ் ஆகிய நான், எனது வீட்டிற்கு செல்லும் ராஜிவ் காந்தி நகர் சாலையில்தான் பஸ் டெப்போவிற்கு செல்லும் பஸ்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பகுதி குடியிருப்பு வாசிகளின் வாகனங்கள் செல்கின்றன.

திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்ட அலுவலக நகர நில அளவை வரைபடத்தின்படி மேற்படி சாலையின் அகலம் 70 அடி அகலமுள்ள சாலையாக உள்ள நிலையில் புலத்தில் சுமார் 25 அடி அளவிற்கு சாலையை பலர் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர். மேற்கண்ட சாலை ஆக்கிரமிப்பால் பொதுமக்கள் மிகவும் சிரமம் அடைந்து வருகின்றனர்.

மேலும் மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற நான் திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்ட உதவி ஆணையரிடம் அன்றே புகார் மனு கொடுத்து மேல் நடவடிக்கைக்காக எடமலைப்பட்டி புதூர் பகுதிக்கான இளநிலை பொறியாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தனர். அதன்பின் கடந்த இரண்டு ஆண்டாக இளநிலை பொறியாளர் அவர்கள் எனது மனுவிற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு உடந்தையாக செயல்பட்டு வருகிறார்.

இவ்விசாரணையின் மூலம் ராஜிவ் காந்தி நகர் பிரதான சாலையில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்ற உரிய உத்திரவினை வழங்கவும் மற்றும் ஆக்கிரமிப்பு புகார் மனு தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டாக எந்தவிதமான நடவடிக்கை எடுக்காமல் இருந்த எடமலைப்பட்டிபுதூர் பகுதிக்கான இளநிலை பொறியாளர் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்திரவு வழங்க நடுவர் முறை மன்றத்திடம் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்" என்றும் தெரிவித்துள்ளார்.

**5. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்**:

மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்த திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொன்மலைக் கோட்டம், ராஜீவ்காந்தி நகர் சாலையை ஆக்கிரமித்து 10 வீடுகளுக்கு மேலாக ஒவ்வொரு வீடும் 10 அடி முதல் 20 அடி வரை ஆக்கிரமிப்பு செய்து தங்களது வீட்டிற்கான தற்காலிக தகரக் கொட்டகை அமைந்துள்ளனர். மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு. வெ. சுந்தரம் என்பவர் மேற்கண்ட பொதுப்பாதையை ஆக்கிரமித்து சுற்றுச் சுவர் மற்றும் பேவர் பிளாக் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். இது தொடர்பாக மாநகராட்சி சட்டம் 1994 விதி 282 (1) (2)ன்படி திரு. சுந்தரம் என்பவருக்கு ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தாக்கீதுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் மேற்கண்ட 10 வீடுகளுக்கும் வாய்மொழியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற மாநகராட்சியால் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட அனைத்து ஆக்கிரமிப்புகளையும் காவல்துறை பாதுகாப்புடன் வரும் 31.8.2023 அன்று அகற்றப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி உதவி ஆணையர் மண்டலம்–4ன் 17.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம், உதவி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம், எடமலைப்பட்டி புதூர், ராஜீவ்காந்தி நகர் பிரதான சாலையை 10 நபர்களுக்கு மேலாக பொதுசாலையை ஆக்கிரமித்து தற்காலிக தகரக்கொட்டை அமைத்தும், திரு.சுந்தரம் என்பவர் பொதுப்பாதையில் சுற்றுசுவர் மற்றும் பேவர் பிளாக் அமைத்து ஆக்கிரமிப்பு செய்திருப்பதும், திரு.சுந்தரம் அவர்களுக்கு மாநகராட்சி சட்டம் 1994 விதி 282 (1) (2)ன்படி ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்றும் அனைத்து ஆக்கிரமிப்புகளை காவல்துறை உதவியுடன் 31.08.23 அன்று அகற்றப்படும் என்று திருச்சி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம் (IV) உதவி ஆணையர் அறிக்கை, உதவி ஆணையர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

மனுதாரர் வார்டு எண்.57 எடமலைப்பட்டி புதூர், ராஜிவ் காந்தி நகர் பகுதியில் உள்ள பொது சாலையை திரு.சுந்தரம் என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று 2022 ஆண்டு முதல் புகார் மனு அளித்தது தொடர்பாக திருச்சி மாநகராட்சியால் திரு.சுந்தரம் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அன்னாருக்கு ரூ.1000/- அபராதம் விதிக்கப்பட்டு திரு.சுந்தரம் 10.11.22 அன்று நீதிமன்றத்தில் குறிப்பிட்ட அபராதத் தொகையை செலுத்தியுள்ளார். அதன்பிறகும், திருச்சி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ல் உள்ள அலுவலர்கள் ஆக்கிரமிப்பை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அறிய முடிகிறது. இம்முறைமன்றம் 21.8.23 நாளன்று விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர் தான் மேற்கண்ட பொதுப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நகரசார் ஆய்வரையின் அறிக்கை 18.8.23ல் பெறப்பட்டு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்செயல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம் 4ன் அலுவலர்கள், பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்ததை கண்டும் காணாமலும் உடந்தையாகவும் இருந்து இருக்கிறார்கள் என்று இம்முறை மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுகுழு அலுவலகம்-4ன் அலுவலர்களின் இந்த மெத்தனபோக்கை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.

## TAMIL NADU URBAN LOCAL BODIES ACT, 1998

128. Power to remove encroachment from public place.-

(1) The Commissioner may, -

(a) Remove without any notice any movable temporary structure, enclosure, stall, booth, any article whatsoever hawked, exposed or displayed for sale or any other thing whatsoever by way of encroaching street or public place or the (land belonging to or vested with the municipality) with the municipal limit;

(b) Remove any immovable structure whether permanent or of temporary nature encroaching the street or public place or the (land belonging to municipality or vested with the municipality) within the municipal limit,

after issuing a show cause notice for such removal, returnable within a period of seven days from the date of receipt thereof:

Provided that the Commissioner shall consider any representation received within the time limit, before passing final orders.

(2) Whoever makes any encroachment in any land or space (not being private property) in any public street or any (land belonging to or vested with the municipality) within the municipal limit, shall, on conviction, be punished with imprisonment which shall not be less than one year but which may extend to three years and with fine which may extend to (fifty thousand rupees):

Provided that the Court may, for any adequate or special reasons to be mentioned in the judgment, impose a sentence of imprisonment for a term of less than one year.

மேற்கண்ட சட்டப்பிரிவுகள் பற்றி மதுரை மாநகராட்சி மண்டலம்-4ன் அலுவலர்களுக்கு எவ்வித புரிதலும் இல்லை என்பது குறித்து இம்முறைமன்றம் தன்னுடைய கடுமையான அதிருப்தியை பதிவு செய்கிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely :–

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx xx xx

(b) xx xx xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules-ன்படி, பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:-

மனுதாரர் 2022 ஆம் ஆண்டு முதல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோஅபிஷேகபுரம் கோட்டம், எடமலைப்பட்டி புதூர், ராஜிவ்காந்தி நகரில் உள்ள பிரதான பொது சாலையை திரு.சுந்தரம் என்பவர் ஆக்கிரமித்து உள்ளார் என்று மனு அளித்தும், இம்முறை மன்றம் இம்மனு மீது 21.8.23 அன்று விசாரணைக்கு உத்திரவிட்ட பின்னர் திருச்சி மாநகராட்சி, வார்டு அலுவலகம்–4ன் அலுவலர்கள், நகரசார் ஆய்வரிடம் 18.8.23 அன்று அறிக்கை பெறப்பட்டு மெத்தனமாக, அலட்சியமாக,

காலதாமதமாக நடவடிக்கை எடுத்த திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு அலுவலகம்-4ன் உதவி ஆணையரை பொறுப்பாக்கி, சம்பந்தப்பட்ட முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு அலுவலகம்-4ஐ உள்ளடக்கிய பகுதிகளில் இவ்வாறான பொதுப்பாதையை ஆக்கிரமித்துள்ளார்கள் என்பதை கள ஆய்வு செய்து அவ் ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு அலுவலகம்-4ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், இந்நிகழ்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை இம்முறை மன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. மு. அரவிந்த் ராஜ், கதவு எண் 8/6 A ராஜிவ் காந்தி நகர், எடமலைப்பட்டி புதூர். திருச்சிராப்பள்ளி – 620 012.

2. ஆணையர். திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பாரதிதாசன் சாலை, கண்டோன்மெண்ட் திருச்சிராப்பள்ளி – 620 001

3. உதவி ஆணையாளர். திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுகுழு அலுவலகம் – IV, திருச்சிராப்பள்ளி

4 நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer) நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

செயலாளர்